

தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் நடந்த பயிற்சிப்பட்டறையில் பெங்களூர் தேசிய சட்டப்பள்ளி முனைவர் ராமகிருஷ்ணன் பேசுகிறார். அருகில் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதி.

## தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக்கழக

# மாணவர்களுக்கு பயிற்சிப்பட்டறை

தஞ்சாவூர்,ஜூலை13—

தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக் கழக மாணவர்களுக்கு தேசிய அளவிலான பயிற்சிப்பட்டறை நிகழ்ச்சி நடந்தது.

தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக் கழக வளாகம் தைபக்-கோரில், 'மின்னணு குறைகடத்தி சிப்கள் மற்றும் பொருட்களின் அறிவு சார்ந்த சொத்துரிமை பாது காப்பு' என்ற தலைப்பில் நடந்த தேசிய அளவிலான பயிற்சிப் பட்டறை நடந்தது.

முனைவர் உஷாதேவி வரவேற்றார். இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் மைக்ரோ எலக்ட்ரானிக்ஸ் பிரிவு முதுநிலை இயக்குனர் சாரி, மின்னணு குறைகடத்தி சிப்களின் மூலம் எவ்வாறு அறிவுசார்ந்த சொத்துரிமை பாதுகாப்பை ஏற்படுத்துவது? என்பது குறித்து மாணவ மாணவிகளுக்கு பயிற்சிப் பட்டறையை துவக்கிவைத்து விளக்கமளித்தார்.

பெங்களூர் தேசிய சட்டப் பள்ளி முனைவர் ராமகிருஷ் ணா, அறிவுசார்ந்த சொத்து ரிமைகளுக்கு சட்ட ரீதியான பாதுகாப்புகள் குறித்து விளக்க மளித்தார்.

முன்னதாக சாஸ்த்ரா பல் கலைக்கழக பதிவாளர் ஆனந்த ராமன் சிறப்பு விருந்தி னர்களுக்கு நினைவுப் பரிசு களை வழங்கினார்.

பயிற்சிப்பட்டறையில் ஏராள மான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

சிபாசிஷ் மற்றும் கவிதா ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். அபித் அலிகான் நன்றி கூறினார்.